**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 4/2022**

**CNR.No.TNCB19000**

Date.24.06.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராமசாமி | **வயது** | 75 |
| **த/பெ** | **காளப்ப கவுடர்** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | சிக்காரம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 24th June 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தாத்தா திருமப்ப கவுடர் அவரது இறப்பை பதிவு செய்யும்போது நானும் எனது மகனும் சென்றிருந்தோம். எத்தனை வருடங்களுக்கு முன்பு சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. சுமார் 10 வருடத்திற்கு மூன்பு சென்றோமா என்றால் 20 வருடத்திற்கு முன்பு இருக்கும். எனது தாத்தா இறக்கும்போது அவருடைய வயது 71. எனது தாத்தா எந்த மாதம் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. இறந்த வருடம் 1954. எந்த விலாசத்தில் இறந்தார் என்றால் சிக்காரம்பாளையத்தில் அவரது வீட்டில் இறந்தார். ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் எனது தாத்தாவின் இறப்பு சான்றை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

2005 ம் ஆண்டு எனது தாத்தாவின் இறப்பு சான்று என்னிடம் இல்லையா என்றால் இல்லை. 2005 ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கில் எனது தாத்தா இறந்ததை சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் இல்லை என்று சொல்கிறார். எனது தாத்தா இறந்த தேதியை இந்த வழக்கில்தான் முதன்முதலில் சொல்கிறேன் என்றால் இல்லை.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.06.24 19:24:03 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.